மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, இந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தவேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை அவைமுன் வைத்துள்ளார்கள்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா 4/1967)

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை (சட்டப் பேரவை மசோதா 4/1967) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று முன் உரைப்பார்கள்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : அவைத் தலைவரவர்களே, “1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முன் உரைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முன்னுரை, பிரிவு 1-இவை நிறைவேற்றப்பட்டன.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை : தலைவரவர்களே, “இந்த மசோதா நிறைவேற்றப்படவேண்டும்” என்ற தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

7. கவர்னர் பேருரையின்மீது விவாதம்:

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல், கவர்னர் உரை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெறும். அன்று கடைசியாகப் பேசிய உறுப்பினர் திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்கள் உரையை தொடர்ந்து ஆற்றி முடிப்பார்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே. 20-ம் தேதி அன்று மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் உரை மீது பேசிய பேச்சின் தொடர்ச்சியாக இன்று பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்

* 25-3-1967 தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.